**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். 2ம் பிரதிவாதி ஆஜர். 3 முதல் 9, 14, 16 முதல் 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 2, 3, 4, 7, 20 பிரதிவாதிகள் மற்றும் 2,5, 6, 7, 8, 9, 14, 16, 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.1 சிவசண்முகம்

<u>**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**</u>

1. 3ம் அயிட்ட சொத்தில் 30 செண்ட் பாகத்தை பொறுத்து 6, 7 பிரதிவாதிகள் 8, 9 பிரதிவாதிகள் பெயரில் ஒரு கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

2. 4ம் அயிட்ட சொத்தில் மொடவாண்டி சத்தியமங்கலம் கிராமம் சர்வேஎண்.135/1, 2 ல் 3 ஏக்கர் பூமி என்றால் சரிதான். 4ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து 10ம் பிரதிவாதி பெயரில் நானும், 1, 3, 4 பிரதிவாதிகளும் சேர்ந்து ஒரு கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 10ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.8 ஆவணம் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 2, 3 இலக்கமிட்டவருக்கு பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று வாசகம் கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் படித்து பார்த்து தெரிந்துகொள்ளவில்லை. நான் எழுதிக்கொடுத்த எந்த கிரய ஆவணங்களிலும் என்ன வாசகங்கள் எழுதியுள்ளது என்று நான் தெரிந்துகொள்ளவில்லை ஏனென்றால் என் தகப்பனாரின் கட்டுப்பாட்டில் இருந்ததால் நான் தெரிந்துகொள்ளவில்லை. என் தகப்பனாரின் கட்டுப்பாட்டில் இருந்தது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா 5வது அயிட்ட சொத்தானது மொடவாண்டி சத்தியமங்கலம் கிராமம் சர்வே எண்.135/2, 3 அதிலுள்ள விஸ்தீரணம் 1.07 ஏக்கர் என்றால் சரிதான். 5வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 12ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரய ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ஆவணமானது தாவா 5வது அயிட்ட சொத்தைப் பொறுத்து கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். 5வது அயிட்ட சொத்தைப் பொறுத்து பவர் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. பவர் ஏஜெண்ட் 11ம் பிரதிவாதி பெயரில் கிரயம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

6. நான் ஏற்படுத்தி கொடுத்த கிரய ஆவணங்களில் எல்லாம் வாதி தரப்பினர் இல்லை என்பதால் அது அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கட்டுப்படுத்தும்.

7. வாதி இளவராக இருந்தபோது வாதியின் நலனுக்கு நான் எதிராக செயல்பட்டு வந்ததால் வாதிக்கு பாதுகாவலராக இருந்து செயல்பட எனக்கு தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு போதும் கர்த்தாவாக இருந்து செயல்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. நான் பாதுகாவலராக இருந்து வாதிக்காக ஏற்படுத்திக்கொடுத்த கிரய ஆவணங்கள் அனைத்தும் வாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றால் சரியல்ல. கட்டுப்படுத்தும். 6 முதல் 19 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த கிரய ஆவணங்களுக்கு எவ்வித பிரதிபிரயோஜனமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 6 முதல் 19 பிரதிவாதிகள் நல்லெண்ண கிரயதாரர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

9. பிரிக்கப்படாத சொத்துக்களைப் பொறுத்து கிரய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் கிரயதாரர்கள் சுவாதீனம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1994ல் இருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். 2000க்கு பின் மேற்கண்ட தொழில் நஷ்டம் ஏற்பட்டதற்கு எவ்வித ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

10. ரியல் எஸ்டேட் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காக தான் நானும், 1, 3, 4 பிரதிவாதிகளும் சேர்ந்து கிரய ஆவணங்கள் ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. கிரய பத்திரங்கள் ஏற்படுத்தி 12 வருட காலங்கள் ஆகிவிட்டதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

11. வாதியின் பிறந்த தேதி 11.03.1996 என்றும், அவர் 11.03.2014ல் மேஜராகிவிட்டார் என்றால் சரிதான். வாதி மேஜராகி 3 வருடத்திற்குள் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

12. 1ம் பிரதிவாதி வாரணவாசிகவுண்டர் நெல்வியாபாரம் செய்து அதன்மூலம் கிடைத்த தனிப்பட்ட வருமானத்தை கொண்டு அவரது பெயரில் சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

13. 1வது அயிட்டத்தில் 12வது இனம் சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 3வது அயிட்ட சொத்து எனது தாத்தா சென்னிமலைகவுண்டருக்கு தனிபட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்பது பொய் என்று சொன்னால் சரியல்ல.

14. 1வது அயிட்ட சொத்தில் விற்பனை செய்த பாகத்தில் வாதி எவ்வித பாகமும் கேட்கமுடியாது என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரிலும், அவரது தகப்பனார் பெயரிலும் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து கிரயம் பெற்றுள்ளதால் கூட்டுக்குடும்ப சொத்துக்களாகத்தான் பாவிக்கவேண்டுமென்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்திலுள்ள 1/12 பாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிரய ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.